R5344

# MAMMON THE PRINCIPLE OF SELFISHNESS
# உலகப்பொருள் சுயநலத்தின் கொள்கை

"இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது."- மத்தேயு 6:24

ஒரு மனிதன் இரண்டு அல்லது அதற்கு மேலான எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முயற்சிக்கலாம். ஆனால் யாரும் ஒரு எஜமானுக்கு மேலாக திருப்தியான ஊழியக்காரனாக இருக்க முடியாது. இரண்டு ஊழியமும் ஒரே மாதிரி இருக்காது. ஒரு ஊழியம் மற்ற ஊழியத்தை ஓரளவுக்கு குறைவுப்படுத்தும். இந்த காரியத்தை கர்த்தர் தமது மலை பிரசங்கத்தில் விளக்கினார். நமது தலைப்பு வசனத்தில் எஜமான்களில் ஒருவராக தேவனையும் இன்னொரு எஜமானனாக உலகப்பொருளையும் அவர் குறிப்பிடுகிறார். உலகப் பொருள் என்பது தேவனுக்கும் அவரது நீதிக்கும் எதிரான அனைத்தையும், சுயநலம் மற்றும் பாவம் இன்னும் அநீதிக்கு சம்பந்தப்பட்ட அனைத்தையும் குறிக்கிறது.

உண்மையைச் சொல்லப்போனால் நாம் பாவத்திற்கு அடிமைகளாக பிறந்திருக்கிறோம். நமது ஆதி பெற்றோர்களின் கீழ்ப்படியாமையினால் நாம் இந்த அடிமைத்தனத்திற்கு விற்கப்பட்டுள்ளோம் என்று வேதவாக்கியங்கள் நமக்கு கூறுகின்றன. ஆகையால் பாவமானது உலகின் முழு மனுக்குலத்தின் மேல் ஒரு பிடிமானத்தையும் பெற்றிருக்கிறது. அவர்கள் அனைவரும் அடிமைகள். இந்த அடிமைத்தனத்தின் பிடியிலிருந்து அவர்கள் தங்களைத் தாங்களே விடுவித்துக் கொள்ள இயலாதவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில் அது உலகைச் சுற்றிலும் எல்லா இடங்களிலும் இருக்கிறது.

சிலர் தீமையில் விருப்பமுற்று அதற்கு விசுவாசமாக இருக்கிறார்கள்; ஆனால் பெரும்பாலானோர் சுயத்துக்கு ஊழியம் செய்வது தேவனை எதிர்ப்பதாகும் என்பதை உணர்ந்து உலகப் பொருளுக்கு இருதயத்தில் விசுவாசமில்லாதிருக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் உலகப்பொருளுக்கு, சுயத்திற்கு ஊழியம் செய்கிறவர்கள், அரசியல் வட்டத்திலும், சமய வட்டத்திலும், சமூக வட்டத்திலும், பொருளாதார வட்டத்திலும் உயர்வை பெறுகிறார்கள். தற்காலத்தில் சுயநலம் வெற்றி பெறுகிறது. அனைத்து மானிட ஏற்பாடுகளும் சுயநலத்தின் திசையிலேயே இருக்கிறது. ஒருவர் சுயநலமில்லாதவராயிருந்தால், இந்த திசையில் சிறப்பாக வேலை செய்கிறார். இல்லையென்றால் சக ஜீவிகளிடமிருந்து எதிர்ப்பு, தவறாக புரிந்து கொள்ளுதல் முதலானவைகளைப் பெறுவார்.

ஆனால் இயேசு ஒரு புதிய ஒழுங்கை ஆரம்பித்தார். பாவத்தை கைவிட்டு தேவனை விசுவாசிக்கிறவர்களை அவர் தம்மிடத்தில் திரும்ப ஏற்றுக்கொள்ள தயாராயிருக்கிறார் என்று இயேசு அறிவித்தார். தேவனுடைய கிருபையான ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்ளுகிறவர் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் விடுவிக்கப்படுவார்கள். "குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்." (யோவான் 8:36)

## சுயநலம் சாத்தானின் குணலட்சணம்

அநேக ஜனங்கள் தங்கள் சுபாவங்களிலே சுயநலமானது வேரூன்றினதாக இருக்கிறது. ஆகையால் சமூக நீதியாகவும் வேறுவிதமாகவும் செய்ய வேண்டியவைகளில் அது மிகவும் கலந்திருக்கிறது. ஆகையால் நமது கர்த்தரின் செய்தியை கேட்ட அநேகருக்கு அது அறிவீனமாக காணப்பட்டது. நமது கர்த்தர் எதையும் நிறைவேற்றாமல், தனது வாழ்க்கையை வீணடித்து இழந்தது அவர்களுக்கு முட்டாள்தனமாக இருந்தது. ஆகையால் அவரது சீஷர்களாவது வீணானது என்று அவர்கள் நினைத்தனர். ஆகையால் அவர்கள் சாத்தானுக்கு ஊழியம் பண்ணுகிறோம் என்று அறியாமல் உலகப் பொருளுக்கு ஊழியம் பண்ண தொடர்கிறார்கள்.

உலகப்பொருளின் கொள்கை, சுயநலத்தின் கொள்கை சாத்தானுடையதாக இருக்கிறது. ஆனால் அவன் தன் விரி குளம்பின் காலை மிகவும் ஜாக்கிரதையாக மறைத்து, ஒளியின் தூதனாக தன்னை காண்பித்துக் கொள்ளுகிறான். அவன் தன்னுடைய வழியாகிய சுயநலத்தின் வழியை பின்பற்ற ஜனங்களை அழைக்கும் அதே சமயம் தேவனை தவறாக சித்தரிக்கிறான். நமது கர்த்தரின் வழியை பின்பற்றுகிற அனைவரும் கேலியாக்கப்படுகிறார்கள். ஏனெனில் இந்த உலகத்தின் அதிபதி அதிக வல்லமை உடையவனாக இருக்கிறான். அவனுக்கு ஊழியம் பண்ணுகிறவர்கள் வேறு எந்த நியாயமான அல்லது முறையான வழியையும் காண முடியாது. இதுவே ஒளியின் பிள்ளைகளுக்கும் இருளின் பிள்ளைகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம்.

சாத்தான் தன்னை ஒரு ஒளியின் தூதனாக அமைத்து வைத்திருக்கிறான். ஆனால் அவர்களது ஊழியக்காரர்களால் இதைக் காணமுடியாது. இப்படியாக அவன் அவர்களுக்கு சேதத்தையே தொடர்ந்து கொடுக்கிறான். அவன் கூறுவதாவது:

“நீங்கள் உலகப்பொருளுக்கு ஊழியம் செய்ய வேண்டாம். ஆனால் உங்கள் மார்க்கத்தில் நடுத்தரமாக இருங்கள். தற்கால காரியங்களுக்கு ஊழியம் பண்ணுங்கள். இந்த பக்கம் கொஞ்சமும் அந்தப்பக்கமும் கொஞ்சமும் செய்யுங்கள்.” அவர்கள் கூறுகிறதாவது: “நாங்கள் மெய்யாகவே எங்கள் இருதயத்தில் தேவனுக்கு ஊழியம் செய்கிறோம். ஆனால் வெளியரங்கமாக நாங்கள் உலகப்பொருளுக்கு ஊழியம் பண்ணவேண்டும். நாங்கள் தேவனுக்கு ஊழியம் செய்கிறோம் என்று உலகம் கண்டால், உலகப்பிரகாரமான ஜீவியத்தை தொடர்வதில் நாம் கஷ்டத்தை அடைவோம்.” அநேகர் இந்த இரட்டை மார்க்கத்தை முயற்சிக்கிறார்கள். இந்த கொள்கை சுவிசேஷயுகத்தின் மூலம் சகலமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தைகளை பயன்படுத்த காரணமில்லாதிருந்தால் இயேசு இந்த வார்த்தைகளை பயன்படுத்தியிருக்க மாட்டார் என்பது நிச்சயம். நாம் தேவனுக்கு விசுவாசமாக இருந்தால், நாம் உலகத்திற்கு உண்மையும் பிரியமுமான ஊழியனாக இருக்க முடியாது என்று இயேசு நமக்கு இங்கே கூறுகிறார். மேலும் நமது இருதயத்தை உலகப்பொருளுக்குக் கொடுத்தால் நாம் தேவனுக்கு பிரியமாயிருக்க முடியாது.

பெரும்பாலான கிறிஸ்தவ ஜனங்கள் இக்காலத்தில் இந்த மனோபாவத்தில் இருக்கிறார்கள். அவர்கள் தேவனுக்கு ஊழியம் செய்ய முயற்சிக்கிறார்கள். எனினும் அவர்கள் தங்களது தற்கால வாழ்க்கையின் நடவடிக்கைகளையும் காரியங்களையும் உலகப்பொருளின் தற்கால ஒழுங்குகளுக்கும் இசைவாக உலகப்பிரகாரமாக இருக்க முயற்சிக்கிறார்கள். தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்வதுகூடாத காரியம் என்பதை அவர்களுக்கு கர்த்தர் அறியப்பண்ணுவார். அவருக்கு ஊழியம் பண்ணுகிறவர்களுக்கு அவர் ஊழியம் கொடுப்பார் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். தேவனைப் பொருத்தவரை நடு நிலையான மார்க்கம் இல்லை என்பதை அவர்கள் அறிய வேண்டும். உலகப் பொருள் பகுதியான ஊழியத்திற்கு பகுதியான வெகுமதி கொடுக்க விரும்பலாம். ஆனால் இயேசுவைப் பொருத்தவரை நமது ஊழியம் பிரிக்கப்படாததாக இருக்க வேண்டும்.

குமாரன் விடுதலையாக்குகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மெய்யாகவே விடுதலையாவார்கள். உலகத்தில் அவர்களுக்கு உபத்திரம் இருக்கும். ஆனால் எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானத்தை அவர்கள் பெறுவார்கள். அவர்களது ஆசீர்வாதங்களையும் உண்மையான நிலைமைகளையும் மற்றவர்களால் உணர்ந்து கொள்ள முடியாது. யாராவது இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முயற்சித்தால், அவர்கள இருதயம் யாராவது ஒருவரை விட்டுப்போகும். ஏனெனில் மென்மேலும் தன்னுடைய நிலைமையை வெறுப்பார். அவர் குமாரனால் விடுதலையாக்கப்பட்டிருந்தால் அவரது ஊழியத்தில் முழுமையாக ஈடுபட்டிருந்தால், பரலோக பிதாவானவரால் அவரது கிருபையான திட்டத்தினால் கையாளப்பட்டிருக்கிற அன்பு, ஞானம், நீதி மற்றும் தெய்வீக ஏற்பாட்டின் இரக்கத்திற்கு மென்மேலும் நிரப்பும். அதனிமித்தம் உலக காரியங்களுக்கு அவருக்கு நேரம் இருக்காது.